# <u>பத்திரிக்கை செய்தி</u>

## <u>நத்தம் பட்டா வழங்குவதற்கு பரிந்துரை செய்ய லஞ்சம் கேட்ட கிராம நிர்வாக அலுவலர் கைது</u>

புகார்தாரர் திரு.ரமேஸ் என்பவர் தன்னுடைய நிலத்திற்கு நத்தம் பட்டா வாங்குவதற்கு இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாலுகா, திருஉத்திரகோசமங்கை கிராமம் தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். இம்மனுவை பரிந்துரை செய்து மேல்நடவடிக்கை எடுப்பதற்கு திரு.தமிழ்பாண்டியன், கிராம நிர்வாக அலுவலர், திருஉத்திரகோசமங்கை கிராமம், கீழக்கரை தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம் அவர்கள், 15.11.2022 அன்று தொலைபேசி வாயிலாக புகார்தாரரை தொடர்பு கொண்டு தனக்கு லஞ்சமாக ரூ.3,000/-ம் கொடுக்கும்படி கேட்டு உள்ளார். ஆனால் புகார்தாரருக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால், புகார்தாரர் இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தை அணுகி புகார் மனு கொடுத்தார், புகார் கொடுத்ததின் அடிப்படையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலர்கள் வழக்கு பதிவு செய்து பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி, பொறி வைப்பு நடவடிக்கையின் போது திரு.தமிழ்பாண்டியன், கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் புகார்தாரரிடம் ரூ.3,000/- லஞ்ச பணத்தை கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.